1972 ஆகஸ்ட் 19]

தொழுநோய்த் தடுப்பு இயக்கம் இருக்கும் இடங்களில், அவர்களுடைய வீட்டிற்கு அருகாமையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. அப்படி அவர்கள் வந்து சிகிச்சை பெறுவிட்டால் இதற்கென நியமிக்கப்பட்ட மருத்துவ பணியாளர்கள் அவர்களுடைய வீட்டிற்கே சென்று சிகிச்சை அளிக்கிறார்கள்.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவர் அவர்களே, பள்ளிமாணவர்களுக்கு கட்டாயமாக ஏதாவது மருத்துவப் பரிசோதனை ஏற்பாடு செய்து, இம்மாதிரியான நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எவ்வளவு பேர் என்று கண்டறிந்து, அவர்களுக்குத் தனியாகச் சிகிச்சை அளிக்கத் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, எந்தப் பகுதியில் மாணவர்கள் அதிகமாகத் தொழு நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ, அந்தப் பகுதியில் சிகிச்சை வழங்க தொழு நோய் பரிசோதனை நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு பொதுவான திட்டத்தின் கீழ் தான் காலத்தில், படிப்படியாக இதனை நிறைவேற்ற முடியும். ஆனால் உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு. அவர்களால் தரப்படுகின்ற ஒரு ரூபாயை கட்டணமாக வைத்துக் கொண்டு ஓரிரு ஆண்டுகளாகவே இந்தப் பரிசோதனைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு, இரண்டு, மூன்று மாவட்டங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

* 87 Q.—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) the number of cases of leprosy detected in children at the Children's Hospital at Egmore, Madras, during 1970–71 and 1971–72; and

(b) the steps taken to check this infection?

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970-71, 1971-72 ஆண்டுகளில் சென்னை எழும்பூரில் உள்ள குழந்தைகள் மருத்துவமனையில் எத்தனை குழந்தைகளுக்குத் தொழுநோய் பற்றியுள்ளதெனக் கண்டறியப்பட்டது?

(இ) இந்த நோய்த் தொற்றினைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

[1972 ஆகஸ்ட் 19

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) எழும்பூரில் குழந்தைகள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறும் குழந்தைகளில் 1970-ம் ஆண்டில் ஒரு குழந்தையும், 1971-ம் ஆண்டில் இரண்டு குழந்தைகளும் தொழுநோயால் பீடிக்கப்பட்டவை என்று கண்டுபிடிக்கப்பட்டன.

(இ) குழந்தைகள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறும் குழந்தைகளில் இருந்து தொழுநோயால் பீடிக்கப்பட்ட குழந்தைகளை கண்டுபிடித்து அரசாங்க பொது மருத்துவமனையில் உள்ள தொழுநோய் பிரிவுக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைக்குமாறு அங்குள்ள எல்லா மருத்துவ அதிகாரிகளுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, இந்தத் தொழுநோயைப்பற்றி, இது ஒரு தொற்று நோய் அல்ல, அப்படி பயப்படவேண்டிய அவசியமில்லை என்று ஒரு கருத்து இருந்து வருகிறது. அது உண்மைதானா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கேள்விக்கு அமைச்சர் முழுப் பொறுப்போடு பதில் அளிக்க முடியாது. இதைத் தொற்று நோய் அல்ல என்று சொல்கிறவர்கள் இருக்கிறார்கள். இது 'ஹெரிடிட்டி' ஆக வருவதும் இல்லை ; தொற்று நோயும் அல்ல என்று சொல்கிறார்கள். வளர்ச்சியடைந்தவர்கள் நெருங்கிப் பழகினாலும்கூட ஒட்டிக்கொள்ள வாய்ப்பு இல்லையென்று கூறப்படுகிறது. குழந்தைப் பருவத்தில் உள்ளவர்கள் இந்த வியாதி உள்ளவர்களிடம் நெருங்கிப் பழகுகிற போது தொத்திட நேரிடலாம் என்று கருதப்படுகிறது. ஆனாலும் இது தொற்று நோய் என்ற அடிப்படையில்தான் பரவலாக அச்சத்துடன் பேசப்படுகிறது.

திரு சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, தொழுநோய் வியாதி பிடித்தவர்கள் இன்னும் ஏராளமான பேர் வீதிகளில் அலைந்து கொண்டிருக்கிறார்கள். பார்ப்பதற்கு அருவருப்பாக இருக்கிறது. அதைத் தவிர்த்திட, அவர்களை எல்லாம் லாரி அல்லது வேன்களில் பிடித்துப்போட்டு, ஒரு இடத்தில் வைத்து சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யக் கூடாதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தொழு நோய் பிடித்தவர்களில் வசதி படைத்தவர்களும் உண்டு. அவர்கள் வீட்டுக்குள்ளேயே தேவையான வசதிகளைப் பெற்றுக்கொண்டு சிகிச்சையும் பெற்றுக்கொள்கிறார்கள். இந்த நோயை வெளியே காட்டினால்தான் மக்கள் நம்மீது அக்கறை காட்டுவார்கள் என்ற மனப்பான்மையில் தெருக்களில் பிச்சைக்காரர்களாக அலைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கவேண்டும், மறு வாழ்வு அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் சென்ற ஆண்டு முதல்வர் கலைஞர் டாக்டர் கருணாநிதி அவர்கள் பிறந்த தினத்தை ஒட்டி சில இடங்களில் இவர்களுக்கான மறுவாழ்வு விடுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய அங்கத்தினர் திரு. ராஜகோபால் போன்றவர்கள் அப்படிப்பட்ட பிச்சைக் காரர்களைக் கண்டால், அப்படியே ஓட விட்டு விடாமல் பிடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Air Pollution

* 88. *Q*.—THIRU SAW. GANESAN (on behalf of THIRU G SWAMINATHAN): Will the Hon. the Minister for Public Health be pleased to state the action proposed to be taken by the Government in removing the air pollution in Basin Bridge area of Madras City?

காற்றின் தூய்மை கெடுதல்

திரு. சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை மாநகரில் பேசின் பிரிட்ஜ் பகுதியில் காற்றின் தூய்மை கெடுவதை நீக்குவதற்காக அரசு எடுக்கத் திட்டமிட்டுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சென்னை நகரில் காற்றின் தூய்மை கெடுதலைத் தவிர்க்க எடுக்க வேண்டிய பலவகைப்பட்ட நடவடிக்கைகள் பற்றி கருத்து தெரிவிக்க வேண்டி அரசு ஒரு குழுவை அமைத்தது. அக்குழுவின் அறிக்கை வரப்பெற்றுள்ளது. அவ்வறிக்கையில் பேசின் பிரிட்ஜ் வட்டாரத்திலும் பேசின் பிரிட்ஜ் மின் நிலையத்திலும் உள்ள தொடர் வண்டி நீராவி இயந்திரம் பற்றிய பரிவுரையிலும் உள்ளது. அவ்வறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.